# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 2nd Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல்<br>Economics | Three Hours ten min<br>Gr -12 (2022) | 21 | T | I,II |

**அறிவுறுத்தல்கள் :-**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.**
- **1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.**

## பகுதி – I

01. புதினப் பத்திரிகையொன்றில் இடம்பெற்ற கட்டுரையொன்றின் கருத்துக்கள் பின்வருமாறு.
   A. அதிக வருமானம் பெறும் ஊழியர்களுக்கு அதிக வரிச்சுமையை ஏற்படுத்த வேண்டும்.
   B. சுகாதார அமைச்சின் விருப்பத்திற்கமைவாக கொவிட் 19 தடுப்பூசி தேசியமயப்படுத்தப் பட்டுள்ளது

   இக் கருத்துக்கள் எவ்வகையான பொருளாதாரக் கூற்றுக்களைக் குறிக்கின்றது.

| | A | B |
|---|---|---|
| 1) | நியமக்கூற்று | நியமக்கூற்று |
| 2) | நியமக்கூற்று | நேர்க்கூற்று |
| 3) | நியமக்கூற்றுயல்ல | நேர்க்கூற்று |
| 4) | நேர்க்கூற்று | நேர்க்கூற்று |
| 5) | நேர்க்கூற்று | நியமக்கூற்று |

(……….)

02. மனித விருப்பங்கள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது தவறானது.
   1) மனித விருப்பங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை.
   2) மனித விருப்பங்கள் விளம்பரங்களினூடாக உருவாக்கப்படும்.
   3) மனித விருப்பங்கள் நவீனத்துவத்துடன் வளர்ச்சியடையும்.
   4) எதிர்கால விருப்பங்கள் நிகழ்கால விருப்பங்களிலும் பார்க்க முக்கியத்துவம் உடையதல்ல.
   5) மனித விருப்பங்கள் போட்டித்தன்மையானது. (……….)

03. அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பான தீர்மானங்கள் மற்றும் அத்தீர்மானங்களை ஒருங்கிணைக்கும் பொறிமுறை அடிப்படையில் பொருளாதார முறைமைகளை வகைப்படுத்தல் தொகுதியில் சரியானது எது?

| | | | |
|---|---|---|---|
| 1) | மரபு ரீதியான முறைமை | கட்டளை முறைமை | சமவுடைமை முறைமை. |
| 2) | கட்டளை முறைமை | சந்தை முறைமை | சமவுடைமை முறைமை. |
| 3) | மரபு ரீதியான முறைமை | விலைப்பொறிமுறை | திட்டமிடல் முறைமை. |
| 4) | விலைப்பொறிமுறைமை | கட்டளை முறைமை | சமூக சந்தை முறைமை |
| 5) | திறந்த சந்தை முறைமை | விலைப்பொறிமுறைமை | கட்டளை முறைமை |

(……….)

04. X பொருள் Y பொருளிற்கு பதிலீடாகவும் Z பொருளிற்கு நிரப்புப் பொருளாகவும் உள்ளது. X பொருளின் விலை வீழ்ச்சியடைந்த பின்னர் யாது நிகழும்?
1) X பொருளிற்கான கேள்வி மட்டும் அதிகரிக்கும்.
2) Y பொருளிற்கான கேள்வி மட்டும் வீழ்ச்சியடையும்.
3) X, Y, Z பொருள்களுக்கான கேள்வி அதிகரிக்கும்.
4) Y பொருளுக்கான கேள்வி வீழ்ச்சியடைய Z பொருளிற்கான கேள்வி அதிகரிக்கும்.
5) Y பொருளிற்கான கேள்வி அதிகரிக்க Z பொருளிற்கான கேள்வி குறையும். (……….)

05. பின்வரும் அட்டவணையானது கிபன்பொருள் மற்றும் இழிவுப்பொருளின் விலை மாற்றம் காரணமாக ஏற்படும் பதிலீட்டு விளைவு மற்றும் வருமான விளைவு என்பவற்றைக் காட்டுகிறது. சரியான சேர்க்கையினை இனங்காண்க.

| | **பொருளின் வகை** | **விலை மாற்றம்** | **பதிலீட்டு விளைவின் காரணமாக கேள்வித் தொகை மாற்றம்** | **வருமான வினாவின் காரணமாக கேள்வித் தொகை மாற்றம்** |
|---|---|---|---|---|
| 1) | கிபன்பொருள் | வீழ்ச்சி | நேர்க்கணியம் | எதிர்க்கணியம் |
| 2) | கிபன்பொருள் | அதிகரிக்கும் | நேர்க்கணியம் | நேர்க்கணியம் |
| 3) | கிபன்பொருள் | அதிகரிக்கும் | எதிர்க்கணியம் | எதிர்க்கணியம் |
| 4) | இழிவுப் பொருள் | அதிகரிக்கும் | எதிர்க்கணியம் | எதிர்க்கணியம் |
| 5) | இழிவுப் பொருள | அதிகரிக்கும் | நேர்க்கணியம் | நேர்க்கணியம் |

(……….)

06. ஒரு பொருளின் விலை அதிகரிக்கும் போது அப்பொருளுக்கான நுகர்வோர் செலவும் அதிகரித்தது எந் நிலைமையின் கீழ் இது நிகழக்கூடும்.
1) குறித்த பொருளின் கேள்வி வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியாக இருத்தல்.
2) குறித்த பொருளின் கேள்வி விலை நெகிழ்ச்சியுள்ளதாக இருத்தல்.
3) நிரப்புப் பொருளின் விலை அதிகரித்தல்.
4) பதிலீட்டுப் பொருளின் விலை அதிகரித்தல்.
5) குறித்த பொருளின் கேள்வி நெகிழ்ச்சியற்றதாக இருத்தல். (……….)

07. குறித்த பண்டத்தின் நிரம்பல் வளையி உற்பத்தி மூலப்புள்ளிக்கூடாக ஆரம்பித்து செல்லும் கோடாகும். இப்பண்டத்தின் மீது அரசாங்கம் அலகு வரியாக ரூபா 5 னை உற்பத்தியின் மீது உற்பத்தியாளருக்கு விதித்தது. விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியில் ஏற்படும் மாற்றம் யாது?
1) நெகிழ்ச்சியுள்ளதிலிருந்து நெகிழ்ச்சியற்றதிற்கு மாறும்
2) நெகிழ்ச்சியற்றதிற்கு மாறும் நெகிழ்ச்சியுள்ளதிலிருந்து மாறும்
3) அலகு நெகிழ்ச்சியிலிருந்து நெகிழ்ச்சியுள்ளதிலிருந்து மாறும்
4) நெகிழ்ச்சியற்றதிலிருந்து அலகு நெகிழ்ச்சிக்கு மாறும்.
5) அலகு நெகிழ்ச்சியிலிருந்து நெகிழ்ச்சியற்றதிற்கு மாறும். (……….)

08. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் அரசினால் விதிக்கப்படும் வரிச்சுமையின் பெரும்பகுதியை நுகர்வோர் தாங்குவார்.

| | **விலைக்கேள்வி நெகிழ்ச்சி** | **விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி** |
|---|---|---|
| 1) | 0 | 0.2 |
| 2) | −0.2 | 2.0 |
| 3) | −1.2 | 0.2 |
| 4) | −2.0 | 2.0 |
| 5) | −1.0 | 1.0 |

(……….)


09. காரின் விலை வீழ்ச்சியடைந்த காரணத்தால் பெற்றோலின் கேள்வி 20% ஆல் அதிகரித்தது கார் மற்றும் பெற்றோலுக்கான குறுக்குகேள்வி நெகிழ்ச்சி – 2 ஆகும் எனின் பின்வருவனவற்றுள் கார்களின் விலைகளில் ஏற்படும் மாற்றம் யாது?

| | **இருந்து (From)** | **க்கு (to)** |
|---|---|---|
| 1) | ரூபா 6000 | ரூபா 5000 |
| 2) | ரூபா 5500 | ரூபா 4500 |
| 3) | ரூபா 5000 | ரூபா 4500 |
| 4) | ரூபா 5000 | ரூபா 5500 |
| 5) | ரூபா 5000 | ரூபா 4000 |

(……….)

10. தரப்பட்ட காலப்பகுதியில் ஒரு போட்டிச் சந்தையில் சாதாரண பொருளொன்றின் கேள்வி நிரம்பல் ஆகிய இரண்டும் அதிகரிக்குமாயின்
1) சமநிலை விலை அதிகரிக்கும் மற்றும் சமநிலைத் தொகையும் அதிகரிக்கும்.
2) சமநிலை விலை வீழ்ச்சியடையும் மற்றும் சமநிலைத் தொகையும் அதிகரிக்கும்.
3) சமநிலை விலை அதிகரித்தாலும் வீழ்ச்சியடைந்தாலும் சமநிலைத் தொகை அதிகரிக்கும்.
4) சமநிலை விலை அதிகரிக்கும் மற்றும் சமநிலைத்தொகை அதிகரிக்கும் அல்லது குறையும்.
5) சமநிலை விலை குறைவதுடன் மற்றும் சமநிலைத்தொகை அதிகரிக்கும் அல்லது வீழ்ச்சியடையும். (……….)


11. பின்வரும் நிரம்பல் வளையி தரவுகளை கருத்திற்கொண்டு A புள்ளியில் நிரம்பல் நெகிழ்ச்சி பெறுமானம் யாது?




1) 0.5  2) 0.58  3) 1.0  4) 0.54  5) 0.2 (……….)


12. குறித்தவொரு பண்டத்திற்கான கேள்விச்சமன்பாடு $Qd = 400 - 20P$ நிரம்பல் சமன்பாடு $QS = 100 + 40$ இப்பண்டத்தின் விலை ரூபா 5 இலிருந்து ரூபா 6 அதிகரிக்கும் போது பின்வருவனவற்றில் பொருத்தமானது எது?
1) சந்தை சமநிலையில் காணப்படும்.
2) சந்தை சமநிலையிலிருந்து பற்றாக்குறையை நோக்கி நகரும்.
3) சந்தை சமநிலையிலிருந்து மிகை நிரம்பலை நோக்கி நகரும்.
4) சந்தை பற்றாக்குறையிலிருந்து மிகை நிரம்பலை நோக்கி நகரும்.
5) சந்தை மிகை நிரம்பலிருந்து பற்றாக்குறையை நோக்கி நகரும். (……….)

13. பின்வரும் வரைபடம் இலங்கையின் ஆகாயம் போக்குவரத்து சந்தையைக் காட்டுகின்றது. ஆரம்ப சமநிலை X ல் உள்ளது எனக் கருதுக. எரிபொருள் விலை அதிகரிப்பதுடன் கொவிட் 19 காரணமாக இலங்கையின் வருமானமும் வீழ்ச்சியடையுமாயின் புதிய சமநிலைப்புள்ளி எங்கு காணப்படும்.
1) A
2) B
3) C
4) D
5) X



14. குறித்த ஒரு பொருளின் உற்பத்தியின் மீது விதிக்கப்படும் ஒரு நேரில் வரியானது அப்பொருளின் விலையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அப்பொருளின் கேள்வியானது
   1) அலகு நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும்.
   2) முடிவிலி நெகிழ்ச்சியாக இருக்கும்.
   3) பூச்சிய நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும்.
   4) நிரம்பல் வளையியை விட குறைவான சரிவினைக் கொண்டிருக்கும்.
   5) விலையுடன் எதிர்கணியத் தொடர்பினைக் கொண்டிருக்கும். (……….)

15. பின்வரும் வரைபடத்தில் D, S ஆகியன முறையே ஆரம்ப கேள்வி நிரம்பல் வளையிகளைக் காட்டுகின்றன. அரசாங்கம் மானியம் ஒன்றினை பிரகடனம் செய்ததன் பின்னர் நிரம்பல் வளையி $S_2$ ஆக நகர்வடைகின்றது. மானியத்தின் பின்னர் நுகர்வோர் உற்பத்தியாளரின் அலகு மானிய அளவு யாது?




| | நுகர்வோர் மானியம் | உற்பத்தியாளர் மானியம் | |
|---|---|---|---|
| 1) | PR | PN | |
| 2) | PN | TQ | |
| 3) | TR | RQ | |
| 4) | RQ | TR | |
| 5) | QT | QB | (……….) |

16. சந்தையொன்றின் சமநிலை விலை ரூபா 5 ஆகும். சந்தை நிரம்பல் ஒவ்வொரு விலையிலும் நெகிழ்ச்சியற்றதிலிருந்து நெகிழ்ச்சியுள்ளதாக மாற்றமடைகின்றது. சமநிலை விலை மாற்றமடையவில்லை. இந்நிகழ்வு நுகர்வோர் மிகை உற்பத்தியாளர் மிகையில் என்னதாக்கத்தை ஏற்படுத்தும்.

| | நுகர்வோர் மிகை | உற்பத்தியாளர் மிகை | |
|---|---|---|---|
| 1) | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் | |
| 2) | அதிகரிக்கும் | மாறாது | |
| 3) | மாறாது | மாறாது | |
| 4) | மாறாது | அதிகரிக்கும் | |
| 5) | வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் | (……….) |

17. நிறைபோட்டி நிறுவனம் ஒன்று மேலதிகமாக ஒரு அலகு வெளியீட்டை விற்பனை செய்யும் போது அதன் எல்லை வருமானம்

1) நிலையானது.
2) ஆரம்பத்தில் வேகமாக அதிகரிக்கும் பின் குறைவடையும்.
3) குறைந்து செல்லும் வேகத்தில் அதிகரிக்கும்.
4) அதிகரித்துச் செல்லும் வேகத்தில் அதிகரிக்கும்.
5) நிலையான வீதத்தில் அதிகரிக்கும். (……….)

18. மொத்த உற்பத்தி (AP) சராசரி உற்பத்தி (AP) எல்லை உற்பத்தி (MP) களுக்கிடையேயான தொடரபுகளுடன் தொடர்புபடாத கூற்றினை இனங்காண்க.

1) எல்லை உற்பத்தி எதிர்கணியமடையும் போது மொத்த உற்பத்தி வீழ்ச்சியடையும்.
2) மொத்த உற்பத்தி உச்சமடையும் போது எல்லை உற்பத்தி பூச்சியமாகும்.
3) எல்லை உற்பத்தி பூச்சியம் அல்லது எதிர்கணியமாகும் போது சராசரி உற்பத்தி ஒரு போதும் நேர்க்கணியமாகாது.
4) மொத்த உற்பத்தி குறைந்த வேகத்தில் அதிகரிக்கும் போது எல்லை உற்பத்தியானது வீழ்ச்சியடையும் ஆனால் நேர்க்கணியம் வரையாகும்.
5) சராசரி உற்பத்தியின் உச்சநிலை அல்லது உற்பத்தி வினைத்திறன் புள்ளியின் போது எல்லை உற்பத்தி வீழ்ச்சியடையும்.

19. பின்வருவன ஆடை உற்பத்தி நிறுவனமொன்றின் சில செலவு வகைகளாகும்.

A) காப்புறுதிக்கட்டணம்
B) முழுநேர ஒப்பந்த தொழிலாளர்
C) பகுதிநேர தொழிலாளர்
D) சந்தைப்படுத்தல் விளம்பரச் செலவுகள்
E) பகுதியளவிலான பயன்பாட்டுச் சிட்டைகள்
F) வட்டிக் கொடுப்பனவுகள்
G) மூலப்பொருளுக்கான செலவுகள்
H) சாதாரண இலாபம்

மேலுள்ள செலவுகளை நிலையான செலவு மாறும் செலவு என வகைப்படுத்தினால் வரும் சரியான விடை.

| | **நிலையான செலவு** | **மாறும் செலவு** |
|---|---|---|
| 1) | A B D H | C E F G |
| 2) | A B D G H | C E F |
| 3) | A C G H | B D E F |
| 4) | A B H | C D E F G |
| 5) | A B D E | C F H G |

20. பின்வரும் தகவல்கள் உற்பத்தி நிறுவனமொன்றின் செலவுகள் தொடர்பானதாகும்.

| **வெளியீடு** | **1** | **2** | **3** | **4** | **5** |
|---|---|---|---|---|---|
| மொத்தச் செலவு | 340 | 375 | 400 | 435 | 475 |
| எல்லைச் செலவு | 40 | 35 | 25 | 35 | 40 |

♦ 6வது அலகு வெளியீட்டுக்கான சராசரி நிலையான செலவு யாது?

1) ரூபா 50
2) ரூபா 60
3) ரூபா 180
4) ரூபா 300
5) ரூபா 175

## பகுதி II

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் பொழுது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒருங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :-**

- **உப பிரிவுகள் "அ" "ஆ" ஆகிய ஒவ்வொன்றிலும் இருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக 4 வினாக்களுக்கு விடை எழுதுக.**

### உப பிரிவு 'அ'

01. i) இலவசப்பண்டம் என்பதனால் கருதப்படுவது என்ன? அதன் பிரதான இயல்புகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

ii) மூலதனம் முதலீடு ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்தி நிலையான மூலதனத்தின் உள்ளடக்கங்களைப் பட்டியல் படுத்துக. (4 புள்ளிகள்)

iii) பின்வரும் சோடி எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.

a) அருமை, பற்றாக்குறை

b) முயற்சியாண்மை, உழைப்பு (2x2=4புள்ளிகள்)

iv) சந்தைப் பொருளாதார முறைமையில் விலைகளின் முக்கிய தொழிற்பாடுகளை விளக்குக. (4 புள்ளிகள்)

v) சமூக சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் வகிபாகத்தினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

02. i) உற்பத்தி சாத்திய வளையி என்பதனால் கருதப்படுவது யாது? அதன் எடுகோள்களைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

ii) பொருளாதார வளர்ச்சி செயன்முறையினால் உற்பத்தி சாத்திய வளையியானது வலதுபுறம் நகர்ச்சியடையும். இதற்குரிய பிரதான காரணிகள் யாவை? (3 புள்ளிகள்)

iii) உற்பத்தி சாத்திய வளையியானது பெரும்பாலும் வெளிநோக்கி குவிவாக அல்லது உள்நோக்கி குழிவாகக் காணப்படும் இக்கூற்றுடன் உடன்படுகிறீரா, அதற்கான காரணங்கள் யாவை? (4 புள்ளிகள்)

iv) பின்வரும் நிகழ்வுகளை உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி விளக்குக.

a) கொவிட் 19 தொற்று நோயின் காரணமாக எழுந்த கேள்வி நிரம்பல் அதிர்ச்சிகளின் பதிவுகள்.

b) பாணுக்கான கேள்வி குறைந்து மற்றும் செலவிடத்தொலை பேசிக்கான கேள்வி அதிகரித்தது ஆனால் இரு தொழில்களிலுமே வேலை வாய்ப்பில் மாற்றமில்லை.

c) செலவிடத் தொலைபேசி உற்பத்தியில் மட்டும் தொழில்நுட்ப அதிகரிப்பு.

d) X பிறஸ் பேள் (X Press Pearl) கப்பலின் தீவிபத்தின் காரணமாக மீனவர்கள் தமது மீன்பிடிவள்ளங்களை மீன்பிடித்தலுக்கு பயன்படுத்தாமை. (1x4=4புள்ளிகள்)

v) கட்டளைப் பொருளாதாரமொன்றின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

03. i) கேள்வி விதியினை வரைவிலக்கணப்படுத்தி, கேள்வி வளையியானது கீழ்நோக்கி சரிந்து செல்வது ஏன் என விளக்குக. (4 புள்ளிகள்)

ii) தனிநபர் கேள்வி வளையிக்கும் சந்தைக் கேள்வி வளையிக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக. (4 புள்ளிகள்)

iii) நுகர்வோர்மிகை, உற்பத்தியாளர், மிகை, பொருளாதார மிகை ஆகிய எண்ணக்கருக்களை விளக்குக. (4 புள்ளிகள்)

iv) கேள்வி பூச்சியமாகும் விலை (Choke price) என்பதன் கருத்து யாது? நுகர்வோர் மிகையை அளவிடுவதில் இது எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதனை உதாரணத்துடன் விளக்குக. (4 புள்ளிகள்)

v) குறித்த பண்டத்தின் சந்தைக்கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

கேள்வி சமன்பாடு $-\ Qd = 50 - 5P$

நிரம்பல் சமன்பாடு $-\ Qs = -10 + 5P$

சந்தைச் சமநிலையின் போது மொத்த மிகையைக் காண்க. (4 புள்ளிகள்)

## உப பிரிவு ‘அ’

❖ **இப்பிரிவிலிருந்து 2 வினாக்களைத் தெரிவு செய்க.**

04. i) நிரம்பல் விதியினை வரைவிலக்கணப்படுத்தி நிரம்பல் விதியில் செல்வாக்கும் செலுத்தும் காரணிகளை விளக்குக. (4 புள்ளிகள்)

ii) சாதாரண பண்டமொன்றின் கேள்வி வளையியொன்றின் உயர்ந்த விலை வீச்சில் கேள்வியானது விலைக்கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகவும் குறைந்த விலை வீச்சில் கேள்வியானது விலை நெகிழ்ச்சியற்றதாகவும் இருப்பது ஏன்? (4 புள்ளிகள்)

iii) வாரம் ஒன்றிற்கு தேசிக்காய் ஒன்றின் விலை ரூபா 15 இலிருந்து ரூபா 25 க்கு அதிகரிக்க அதன் நிரம்பல் தொகையானது 200 அலகுகளிலிருந்து 300 அலகுகளிற்கு அதிகரித்தது. இதன் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியைக் கணிப்பிடுக. (3 புள்ளிகள்)

iv) மோட்டார் வாகனங்களுக்கான விலை அதிகரிப்பானது அதன் வாகனக் காப்புறுதி (Vehicle Insurance) கேள்வி வளையியில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என விளக்கி அதற்கான காரணங்களைப் பட்டியல்படுத்துக. (5 புள்ளிகள்)

v) ஒரு போட்டிச் சந்தையில் விற்கப்படும் தேங்காய்களின் கேள்வி நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் பிரதிநிதித்துவப்படுத்துவதாக கருதுக.

$$Qd = 80 - 2P$$

$$Qs = -20 + 3P$$

a) தேங்காயின் சந்தைச் சமநிலை விலையையும் தொகையையும் காண்க. (1 புள்ளி)

b) தற்போது இப்பொருளின் உற்பத்தியாளர் மீது ரூபா 5 சிறப்புவரி விதிக்கப்படுவதாகக் கொள்க. வரியின் காரணமாக கொள்வனவாளர் செலுத்தும் விலையையும் உற்பத்தியாளர் பெற்றுக் கொள்ளும் தேறிய விலையையும் காண்க. (3 புள்ளிகள்)

05. i) பொருளொன்றின் சந்தைக் கேள்வி நிரம்பல் வளையிகளை பின்வரும் சமன்பாடுகள் விபரிக்கின்றன.

$Qd = 60 - 2P$ $\qquad$ $Qs = -20 + 3P$ (4 புள்ளிகள்)

a) சமன்பாடுகளைத் தீர்த்து சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றைக் கணிப்பிடுக. (1 புள்ளி)

b) சமநிலை விலையில் விலைக்கேள்வி நெகிழ்ச்சியினைக் கணிப்பிடுக. *(1 புள்ளி)*

c) இச் சந்தையிலுள்ள உற்பத்தியாளருக்கு அலகொன்றிற்கு ரூபா 20 வினை குறைநிரப்பு கொடுப்பனவாக வழங்கும் வகையிலான உத்தரவாத விலையினை அரசாங்கம் அறிமுகம் செய்வதாகக் கருதுக. இவ்விலை ஆதரவுத்திட்டத்தினால் அரசாங்கத்திற்கு ஏற்படும் மொத்தச் செலவு யாது? *(4 புள்ளிகள்)*

d) உத்தரவாத விலையின் கீழ் நுகர்வோர் மிகை உற்பத்தியாளன் மிகை என்பவற்றின் பெறுமதியைக் கணிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

ii) "உயர்ந்தபட்ச வீட்டு வாடகை விலைக்கட்டுப்பாட்டு சட்டத்தினால் அனுமதிக்கப்படுதல்" என்பதன் கருத்து யாது? சமநிலை விலையை விட குறைவான விலையில் வீட்டு வாடகை நிச்சயிக்கப்படுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

iii) உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படும் போது கேள்வி மற்றும் நிரம்பல் நெகிழ்ச்சியற்ற சந்தையிலும் பார்க்க கேள்வி மற்றும் நிரம்பல் நெகிழ்ச்சியுள்ள சந்தையில் பொருளாதார வினைத்திறனின்மை அதிகமாகக் காணப்படும். இக்கூற்றுடன் உடன்படுகிறீரா? வரைபட உதவியுடன் விளக்குக. *(4 புள்ளிகள்)*

iv) இழிவு விலைக் கொள்கையை அமுல்படுத்தும் போது, உருவாகும் பொருளாதார செயல் திறனின்மைக்கு இட்டுச் செல்லும் விரும்பத்தகாத விளைவுகளைக் குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

*06.* i) குறைந்து செல்லும் எல்லைவினைவுவிதி அளவுத்திட்டவினைவுவிதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக. *(4 புள்ளிகள்)*

ii) பின்வரும் நிகழ்வுகள் நிறுவனத்தின் குறுங்கால மொத்தமாறும் செலவிலும் மொத்த நிலையான செலவிலும் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது.

a) சம்பள வீதம் அதிகரித்தல்.

b) ஆதனவரி வீழ்ச்சியடைதல்.

c) புதிய மூலதனப் பொருட்களின் நிரம்பல் அதிகரித்தல்.

d) எரிபொருளின் விலை அதிகரித்தல். *(1x4=4 புள்ளிகள்)*

iii) a) உற்பத்தி நிறுவனமொன்றின் நிலையான செலவின் பிரதான உள்ளடக்கங்கள் யாவை?

b) பின்வரும் பொருட்களும் சேவைகளும் இலங்கையில் எத்தகைய சந்தைக்கட்டமைப்புக் குள்ளே விற்பனை செய்யப்படுகின்றன.

a) கரட் b) தனியார் கல்வி நிறுவனம்

c) தொலைக்காட்சி சேவைகள் d) நீர்வழங்கல்

e) செலலிடத்தொலைபேசி வலைப்பின்னல் f) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

g) ஆடை h) வணிக வங்கிகள் *(2 புள்ளிகள்)*

iv) சிலருரிமை சந்தைக்கும் தனியுரிமை போட்டிச் சந்தைக்கும் இடையில் காணப்படும் பிரதான பண்பு வேறுபாடுகள் யாவை? *(4 புள்ளிகள்)*

v) ஒரு நிறைபோட்டிக் கைத்தொழிலுள்ள நிறுவனங்களின் குறுங்கால நிரம்பல் வளையிகளிலிருந்து கைத்தொழிலின் குறுங்கால நிரம்பல வளையியை நீர் எவ்வாறு பெறுவீர். பொருத்தமான வரைபடத்துடன் விளக்குக. *(4 புள்ளிகள்)*